**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ.,எம்.எல்.,**

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.**

2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**I.D.No.298/2019**

**CNR No.TNKP 18-000590-2019**

E.சக்திவேல்,
தொழிலாளி எண்: GR 214
த/பெ.M.ஏகாம்பரம்
எண்.27, செட்டி தெரு, குருமஞ்சேரி கிராமம்,
சீட்டணஞ்சேரி அஞ்சல்,
ஒரக்கட்பேட்டை வழி,
உத்திரமேரூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம் -603 106 ... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம் ,
கிரீடோ இந்தியா பிரைவேட் லிமிடெட்,
பிளாட் எண்.59/2, 8வது நிழற்சாலை,
1வது குறுக்கு சாலை,
மஹிந்தரா வேர்ல்ட் சிட்டி,
செங்கற்பட்டு தாலுக்கா,
காஞ்சீபுரம் மாவட்டம் - 603 004. ... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 15.05.2026 அன்று முதல் நிலை விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில்

வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.J.பிரதாபன், S.ருத்ரநாத் மற்றும் N.பொன்னுரங்கம் ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். M.இளங்கோவன், M.தண்டாயுதபாணி மற்றும் R. கார்த்திக் ஆகியோர் ஆஜராகியும் நடத்தப்பட்ட முதல் நிலை விசாரணையில் இருதரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**முதல் நிலை விசாரணைக்கான உத்தரவு**

1. மனுதாரரை பணியிலிருந்து நீக்கிய எதிர்மனுதாரரின் 24.11.2016 நாளிட்ட உத்தரவு இயற்கை நீதிக்கும், மாதிரி நிலையாணைகளுக்கும், தொழிற்தகராறு சட்டத்திற்கும் விரோதமானது என்பதால், அந்த உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பின்சம்பளமும் இதர பண மற்றும் பணி பயன்களும், பணித்தொடர்ச்சியும் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் ஐடிஐ படித்துள்ளார். மனுதாரர் 23.09.2013 அன்று எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் EDM துறையில் CNC Wire Cutting

Machine ஆப்ரேட்டராக பணியில் சேர்க்கப்பட்டு 01.04.2015 தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டார். அவருடைய கடைசி மாதச்சம்பளம் ரூ.9,136/-.

எதிர்மனுதாரர் தொழிற்சாலை கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் சீனா நாட்டைச்சார்ந்த ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். டயர் உற்பத்திக்கு தேவையான உயர் Mould & Bladder mould ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலையாகும். இந்த தொழிற்சாலை JK Tyre-MRF, CEAT, Birla, Continental, Apollo, Good year, Flat Mould, OAK போன்ற முன்னணி நிறுவனங்களை வாடிக்கையாளராக கொண்டு, நல்ல லாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனத்தில் சுமார் 400க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வந்தாலும் அதில் 130 தொழிலாளர்களை மட்டுமே நிரநத்ர தொழிலாளர்களாக்கி, மீதமுள்ளவர்களை பயிற்சியாளர்கள் என்றம், வேலை பழகுநர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் என்ற பெயரில் அமர்த்தப்பட்டு நேரடி உற்பத்தியில் ஈடுபட செய்து, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை வழங்கி கடுமையாக வேலை

வாங்குவதோடு கொத்தடிமைகள் போல் நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை சட்டப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. தொழிலாளர்களுக்குள்ள பிரச்சனைகளை நிர்வாகத்துடன் பேசி சுமூக தீர்வு காண ஒரு தொழிற்சங்கத்தை 03.06.2015 தேதியில் உருவாக்கினார்கள். தொழிற்சங்கத்தின் மூலம் பொதுக்கோரிக்கைகளை வலியுறுத்தி 08.06.2015 தேதியில் தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் முன்பாக தொழிற்தகராறு எழுப்பினார்கள். மனுதாரர் தொழிற்சங்கத்தின் முன்னணி ஊழியர் ஆவார். இதை பொறுத்துக்கொள்ளாத நிர்வாகம் தொழிற்சங்கத்தின் முன்னணி நிர்வாகிகளை பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு தொழிலாளர்களை சங்கத்தைவிட்டு நீங்க வேண்டுமென்று மிரட்டியது. எனவே தொழிற்சங்கத்தின் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும் 19.06.2015 தேதியில் செங்கல்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. நிர்வாகம் மனுதாரர் மீது உண்மைக்கு புறம்பான குற்றங்களை சுமத்தி 27/01/2016 தேதியிட்ட உத்தரவின் மூலம் தற்காலிக

பணி நீக்கம் செய்தது. அதன் பின்னர் 30.01.2016 அன்று குற்றச்சாட்டு அறிக்கை அளித்தது. அதில் உண்மைக்கு புறம்பான வகையில் மனுதாரர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தியது. அதற்கு மனுதாரர் 15.02.2016 தேதியில் தனது விளக்க கடிதத்தை அளித்தார். அவரது விளக்கத்தை ஏற்க மறுத்து உள்துறை விசாரணை நடத்த நிர்வாகம் 20.02.2016 தேதியில் உத்தரவிட்டது. முதல் நாள் விசாரணையில் மனுதாரர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுப்பதாக தெரிவித்தார். பின்னர் 31.03.2016 நாளிட்ட கடிதத்தில் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டு இனிவரும் காலங்களில் அவ்வாறு நிகழாது என உறுதியளித்தும், தற்காலிக பணி நீக்கம் செய்த காலத்தை தண்டனையாக கருதி மீண்டும் பணி வழங்குமாறு கோயிருந்தார். அதன்படி சில விளக்க கேள்விகளை மட்டும் நிர்வாக பிரதிநிதி கோரினார். விசாரணையும் இருதரப்பின் சம்மதத்தோடு முடித்துவைக்கப்பட்டது.

மனுதாரர் கோரியபடி மீண்டும் பணி வழங்குவார்கள் என்று நம்பியிருந்த நிலையில் நிர்வாகம் விசாரணை அதிகாரியின் 16.04.2016

நாளிட்ட கடிதத்தை அனுப்பி மனுதாரரின் கருத்தினை கோரியது. மீண்டும் மனுதாரர் 02.05.2016 தேதியிட்ட விளக்கத்தை அனுப்பினார். அவருடைய பதிலை ஏற்காமல் நிர்வாகம் ஏன் நிரந்தர பணி நீக்கம் செய்யக்கூடாது என விளக்கம் கோரி 01.06.2016 தேதியிட்ட இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கியது. அதற்கான விளக்கத்தை மனுதாரர் 09.06.2016 தேதியில் விளக்கம் அளித்தார். மனுதாரரின் பதிலை ஏற்க மறுத்து எதிர்மனுதாரர் நிர்வாகதம் 24.11.2016 தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரரை பணியிலிருந்து நீக்கி உத்தரவிட்டது. இதை எதிர்த்து தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) திருபெரும்பத்தூர் முன்பாக தாக்கல் செய்த ஏற்பளிப்பு மனு அனுமதிக்கப்பட்டது.

வேலை நீக்கத்திற்கு பிறகு மனுதாரர் வேறு எங்கும் பணிபுரியாததால் மனுதாரர் குடும்பமும் மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகிறது. மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள விசாரணை அதிகாரியின் இறுதியறிக்கை ஒரு perverse அறிக்கையாகும். மனுதாரர்

சுமார் 3 ஆண்டுகள் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் பணியாற்றியுள்ளார். அவரின் பணிக்காலம் அப்பழுக்கற்றது. எனவே மனுதாரரின் கடந்தகால பணியை கணக்கில் கொள்ளாமல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கியுள்ள தண்டனை கொடுந்தண்டனையாகும். மனுதாரர் பணிநீக்க உத்தரவை ரத்து செய்ய கோரி 04.10.2018 தேதியில் தொழிலாளர் இணை ஆணையர் முன்பாக மனு தாக்கல் செய்யப்பட்டு சமரசம் எட்டப்படாததால் சமரச முறிவு அறிக்கை 16.04.2019 தேதியில் அளிக்கப்பட்டது.

எனவே மனுதாரரை பணியிலிருந்து நீக்கிய எதிர்மனுதாரரின் 24.11.2016 நாளிட்ட உத்தரவு இயற்கை நீதிக்கும், மாதிரி நிலையாணைகளுக்கும், தொழிற்தகராறு சட்டத்திற்கும் விரோதமானது என்பதால், அந்த உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பின்சம்பளமும் இதர பண மற்றும் பணி பயன்களும், பணித்தொடர்ச்சியும் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் கோரிக்கை மனுவில் உள்ள சங்கதிகளை எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைபெற்றவராவார்.

எதிர்மனுதாரர் Tyre mould போன்ற வாகன உதிரிபாகங்களை தயாரிக்கும் சீனா நிறுவனத்தின் துணை நிறுவனமாக செயல்படுகிறார். மனுதாரர் 66 கோடிக்கு மேல் முதலீடு செய்து செப்டம்பர் 2012ல் தனது தொழிலை தொடங்கியுள்ளார். எதிர்மனுதாரர் தொழிற்சாலை செங்கல்பட்டு தாலுகாவிலுள்ள மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் அமைந்துள்ளது. மனுதாரர் மேலே குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள பிரதிவாதியின் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். இந்த தொழிற்சாலை 2011 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது, மேலும் இது வாகன உதிரிபாகங்களை உற்பத்தி செய்கிறது. வரையறுக்கப்பட்ட வணிக ஆர்டர்கள் காரணமாக தரத்தை அடைவதற்கும் அதன் வணிகத்தின் சரியான நேரத்தில் பொருள் கழிவுகளை

குறைப்பதற்கும், செலவு குறைந்த உற்பத்தி செயல்பாட்டிற்கான உற்பத்தி விதிமுறைகள் மற்றும் SOPஐ கண்டிப்பாக பின்பற்றுவதை எதிர்மனுதாரர் எப்போதும் கட்டாயப்படுத்தினார்.

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Wire cutting sectionல் ஆப்ரேட்டராக 26.01.2016 தேதியில் சுமார் 02.10 மணியளவில் மூன்றாம் ஷிப்டில் பணிபுரிந்த போது உதவி மேலாளர் மற்றும் பாதுகாப்பு அலுவலர் பரிசோதிக்க வந்த போது மனுதாரர் பணிபுரியும் இடத்தில் இல்லை. கேண்டீன் பகுதியில் உள்ள அறையில் தூங்கிகொண்டிருந்தார் என அறிக்கை கொடுத்தார். விசாரணை நிலுவையில் இருக்கும்போது 27.01.2016 தேதியில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு 30.01.2016 தேதியில் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதற்கு மனுதாரர் 15.02.2016 தேதியில் அளித்துள்ள விளக்கம் திருப்திகரமாக இல்லை என்பதால் உள்துறை விசாரணை நடத்த முடிவு செய்து வழக்கறிஞர் A.K.கலைமணி என்பவரை விசாரணை அதிகாரியாக நியமித்து விசாரணை தொடங்கப்பட்டது. நிர்வாக பிரதிநிதியாக திரு.சதீஷ்பாபு

என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். 17.03.2016 தேதி முதல் உள்துறை விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. விசாரணையில் நிர்வாகத்தரப்பில் 7 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் நகல்களை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணையில் மனுதாரர் அசதியாக இருந்ததால் தூங்கியதாக ஒத்துக்கொண்டுள்ளார். மனுதாரர் மன்னிக்க கோரியதுடன் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட் வேண்டும் என்று வேண்டினார். மனுதாரர் இச்சம்பவத்தில் முதல் முறையாக ஈடுபட்டவில்லை. 02.04.2016 தேதியில் விசாரணை நடைபெற்றுள்ளது. இரு தரப்பிலும் ஒப்பதலுடன் 02.04.2016 தேதியில் விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு விசாரணை அதிகாரி 16.04.2016 தேதியில் முடிவறிக்கையை வழங்கினார். அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் மனுதாரர் 01.06.2016 தேதியிட்ட காரணம் கோரும் அறிவிப்பில் ஏன் பணி நீக்கம் செய்யக்கூடாது என கேட்டு அனுப்பபட்டது. அதற்கு 09.06.2016 தேதியில் மனுதாரர் அளித்த விளக்கம் நிர்வாகத்திற்கு திருப்தி ஏற்படாத காரணத்தினால் 04.10.2016 தேதியில் பணி

நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்த பணி நீக்க உத்தரவானது தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதற்கான விசாரணை நிலுவையில் உள்ள 27.01.2016 தேதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

மனுதாரர் தொழிலாளர் உதவி ஆணையர் -1 முன்பாக தாக்கல் செய்யப்பட்ட I.D.No.AA/1456/2015, AA/1830/2015 ஆகிய வழக்குகளில் சம்மந்தப்பட்ட ஒரு தொழிலாளி ஆவார். தொ.த.ச.பிரிவு 33(2)(b)ன்படி மனுதாரருக்கு ஒரு மாத ஊதியமாக ரூ.9136/- யை 02.05.2018 தேதியில் வரைவோலை மூலமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொ.த.விதி 64, துணை விதி(2)ன்படி மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் ஒரு நகல் முறையாக அனுப்பப்பட்ட பின்னர் படிவம் Tல் அப்ரூவல் மனு ஸ்ரீபெரும்புதூர் ACL-I ல் ஒரே நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் அந்த விண்ணப்பத்தை பெற்றவுடன் எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை மறுக்கவோ அல்லது அதற்கு எதிராக எந்த ஆட்சேபனையும் எழுப்பவோ இல்லை. எனவே எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையையும், உத்தரவையும் ACL-I

முறையாக அங்கீகரித்தது. ஆகவே வழக்கு 02.06.2017 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு மனுதாரர் தொ.த.சா.பிரிவு 2Aன்கீழ் துணை தொழிலாளர் ஆணையர் முன்பு தாக்கல் செய்யப்பட்டதில் சமரசம் ஏற்படாததால் சமரச முறிவறிக்கை 16.04.2019 தேதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. எதிர்மனுதாரர்/நிர்வாகத்தரப்பில் நி.சா.1 விசாரிக்கப்பட்டு நி.சா.ஆ-1 முதல் நி.சா.ஆ.23 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

5. **மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா-? என்பதே தற்போதைய முதல்நிலை விசாரணைக்கான பிரச்சனையாகும்.**

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. 26.01.2016 தேதியில் சுந்தரவரதன் மற்றும் தமிழ்செல்வன் ஆகியோர் மனுதாரர் மீது புகார் (நி.சா.ஆ.2,3) அளித்துள்ளார்கள். அதில் 26.01.2016 தேதியில் சுமார் 02.10 மணியளவில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Wire cutting sectionல் ஆப்ரேட்டராக பணிபுரியும் மனுதாரர் மற்றும் சேதுராமன் ஆகிய இருவரும் பணிபுரியும் இடத்தில் இல்லை. இருவரும் கேண்டீன் மேலே உள்ள Rest roomல் தூங்கி கொண்டிருந்தனர் என்று HR மனோகரிடம் புகார் அளித்துள்ளனர். மனுதாரரை நிர்வாகம் 27.01.2016 தேதியில் பணியிடை நீக்கம்(நி.சா.ஆ.4 செய்துள்ளது. சுந்தரவரதன் மற்றும் தமிழ்செல்வன் ஆகியோர் மனுதாரர் மீது புகார் அடிப்படையில் மனுதாரருக்கு 30.01.2016 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை (நி.சா.ஆ.5) கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தன் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டு, இனி இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க உறுதியளிக்கிறேன் என்று 15.02.2016 தேதியிட்ட கடிதத்தின்(நி.சா.ஆ.6) மூலம் தெரிவித்துள்ளார். அதை ஏற்றுக்கொள்ளாத

எதிர்மனுதாரர் நிர்வாகம் துறை விசாரணை நடத்த முடிவு செய்து நியமன ஆணை (நி.சா.ஆ.7) பிறப்பித்து, உள்துறைவிசாரணை 17.03.2016 தேதியில் துவங்கப்பட்டுள்ளது. அன்றைய தின விசாரணையில் விசாரணை அதிகாரி, நிர்வாக பிரதிநிதி சதீஷ்பாபு, குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் சக தொழிலாளி மனோகுமார் ஆகியோர் ஆஜரானார்கள். அன்றைய தினமே விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவருக்கு விசாரணை நடைமுறைகள் பற்றி தெரிவித்துள்ளார். நிர்வாக தரப்பில் ஆவணங்கள் பதியப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரிடம் குற்றச்சாட்டை பற்றி விசாரித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணை அதிகாரியிடமும், நிர்வாக பிரதிநிதியிடமும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். நிர்வாகத்தரப்பு சாட்சி தமிழ்செல்வன் தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். நிர்வாகத்தரப்பு சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய குற்றம் சாட்டப்பட்டவர் 15 நாள் அவகாசம் கோரியதால் விசாரணை அதிகாரி விசாரணையை 23.03.2016 தேதிக்கு

ஒத்திவைத்துள்ளார். அன்றைய விசாரணை நடவடிக்கை நகல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 23.03.2016 தேதியில் நடைபெற்ற விசாரணையில் இருதரப்பினரும் ஆஜரானார்கள். நி.சா.1யை குற்றம் சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்தார். மேலும் குறுக்குவிசாரணை செய்ய குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைக்க கேட்டுக்கொண்டதால் விசாரணை 31.03.2016 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தின விசாரணையில் இரு தரப்பினரும் ஆஜரானார்கள். விசாரணையின் ஆரம்பத்தில் குற்றச்சாட்டுகளை மறுப்பதாக கூறியதை மறுத்து தான் 25.01.2016 அன்று இரவு ஷிப்டில் தூங்கியதாகவும் அதற்கான காரணத்தை கூறி கடிதத்தை வழங்கியுள்ளார் அது குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு ஆவணமாக பதியப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவரை நிர்வாக பிரதிநிதி குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேலும் விளக்க கேள்வி கேட்க கால அவகாசம் கோரியதால் விசாரணையின் தொடர்ச்சி 02.04.2016 தேதிக்கு

ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தின விசாரணையில் இருதரப்பினரும் ஆஜரானார்கள். நிர்வாகபிரதிநிதி குற்றம் சாட்டப்பட்டவரிடம் கேள்விகள் கேட்டுபட்டு விசாரணை முடித்துள்ளார். இரு தரப்பு சம்மதத்துடன் விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. கோப்பு கண்டறிதலுக்காக நிலுவையில் வைக்கப்படுகிறது. விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளி தனது விளக்கத்திலேயே குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார். பின்னர் விசாரணையின் ஆரம்பத்தில் குற்றச்சாட்டுகளை மறுத்தும் பின்னர் மீண்டும் குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் நிர்வாகம் குற்றம் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபித்த நிலையிலும் நிர்வாகம் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக விசாரணை அதிகாரி 16.04.2016 தேதியிட்ட விசாரணை முடிவறிக்கை (நி.சா.ஆ.9) குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. உள்துறை விசாரணை முடிவறிக்கையின் அடிப்படையில் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு (நி.சா.ஆ.10) மனுதாரருக்கு அளிக்கப்பட்டு, அதற்கு மனுதாரர் அளித்த விளக்கம் (நி.சா.ஆ.11) திருப்தியில்லாத காரணத்தினால் மனுதாரை எதிர்மனுதாரர் நிர்வாகம் 04.10.2018 தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. நி.சா.12 மூலமாக மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஒரு மாத சம்பளமாக ரூ. 9136/- மற்றும் முழு மற்றும் இறுதி தொகையையும் காசோலையாக அனுப்பப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும் மனுதாரருக்கு பணியிடை நீக்கம் செய்த காலத்திற்கான பிழைப்பூதியம் (நி.சா.ஆ.19) வழங்கப்பட்டுள்ளது.

9. உள்துறை விசாரணை நடவடிக்கைகள் குறிப்புகளையும், எதிர்மனுதாரர் தரப்பு கடிதங்கள், ஆவணங்களை பரிசீலிக்கையில் உள்துறை விசாரணை துவங்கும் போதே விசாரணை அதிகாரி விசாரணை நடைமுறைகளை பற்றி மனுதாரருக்கு விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.உள்விசாரணையில் பங்கேற்க சக ஊழியராக

நிறுவனத்தில் பணியாற்றும் எந்த சக ஊழியரையும் அழைத்து வருவதற்கு நிர்வாகத்தரப்பில் அனுமதிக்கப்பட்டதன் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணையின் போது சக தொழிலாளியை அழைத்து வந்துள்ளார். உள்துறை விசாரணையில் சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையிலும், அவரின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக விசாரணை முறிவறிக்கையை வழங்கியுள்ளார். விசாரணை அதிகாரி விசாரணை நடைமுறைபடியே விசாரணையை நடத்தியுள்ளார். எனவே உள்துறை விசாரணை இயற்கை நீதிக்கு உட்பட்டு நடந்ததாக முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதாகவே இந்த முதல்நிலை விசாரணைக்கு தீர்வு காணப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2026.05.22 18:54:58 +0530

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம்,**

**காஞ்சீபுரம்.**

**மனுதாரர்/தொழிலாளி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை.

**எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு சாட்சி :** சதீஷ்பாபு

**எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.1 | 03.02.2026 | எதிர்மனுதாரர்/நிர்வாகம் நிர்வாக தரப்பு சாட்சிக்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் அசல். |
| நி.சா.ஆ.2 | 26.01.2016 | எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர் சுந்தரவரதன் என்பவர் மனுதாரர் மீது கொடுத்த புகார் நகல். |
| நி.சா.ஆ.3 | 26.01.2016 | எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் உதவி மேலாளர் தமிழ்செல்வன் என்பவர் மனுதாரர் மீது கொடுத்த புகார் நகல். |
| நி.சா.ஆ.4 | 27.01.2016 | பணியிடை நீக்க ஆணை நகல். |
| நி.சா.ஆ.5 | 30.01.2016 | குற்றச்சாட்டு குறிப்பாணை நகல். |

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.6 | 15.02.2016 | மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| நி.சா.ஆ.7 | 20.02.2016 | துறை விசாரணை நியமன ஆணை நகல். |
| நி.சா.ஆ.8 | 17.03.2016 முதல் 02.04.2016 | உள்துறை விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.சா.ஆ.9 | 16.04.2016 | விசாரணை அதிகாரி வழங்கப்பட்ட விசாரணை முடிவறிக்கை நகல். |
| நி.சா.ஆ.10 | 01.06.2016 | இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| நி.சா.ஆ.11 | 09.06.2016 | மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| நி.சா.ஆ.12 | 04.10.2016 | பணி நீக்க உத்தரவு நகல். |
| நி.சா.ஆ.13 | 04.10.2016 | ஒரு மாதத்திற்கான சம்பள ரூ.9136/-க்கான கடிதம்,வரைவோலை மற்றும் முழு மற்றும் இறுதி செட்டில்மெண்ட் தொகைக்கான கடிதம் வரைவோலை நகல். |
| நி.சா.ஆ.14 | 04.10.2016 | எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அப்ரூவல் மனு (Form T ) நகல். |
| நி.சா.ஆ.15 | 29.01.2018 | அப்ரூவல் மனுவிற்கான உத்தரவு நகல். |
| நி.சா.ஆ.16 | 05.11.2018 | துணை தொழிலாளர் ஆணையர் முன்பாக மனுதாரர் தாக்கல் செய்த 2A மனுவின் நகல். |
| நி.சா.ஆ.17 | 26.02.2019 | துணை தொழிலாளர் ஆணையர் முன்பாக எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரை நகல். |
| நி.சா.ஆ.18 | 16.04.2019 | துணை தொழிலாளர் ஆணையர் அளித்த முறிவறிக்கை நகல். |

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.19 | ஜனவரி 2016 முதல் அக்டோபர் 2016 | பிழைப்பு ஊதிய தொகை வழங்கியதற்கான கடிதம் மற்றும் வரைவோலை நகல். (எண்ணிக்கை 10) |
| நி.சா.ஆ.20 | 07.03.2016 | நிர்வாகப்பிரதிநிதி நியமன ஆணை நகல். |
| நி.சா.ஆ.21 | 07.03.2016 | நிர்வாகப்பிரதிநிதி விசாரணை அதிகாரிக்கு தெரிவித்தல் நகல். |
| நி.சா.ஆ.22 | 10.03.2016 | துறை விசாரணை, அதிகாரி, இடம், நிர்வாகப்பிரதிநிதி அறிவிப்பு நகல். |
| நி.சா.ஆ.23 | 21.04.2016 | விசாரணை அதிகாரி மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல். |

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.05.22 18:54:50 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.